# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2473/16 - 2026 ජනවාරි මස 28 වැනි බදාදා - 2026.01.28

*2473/16 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.சீ.எவ். 1/64

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**அநுர குமார திசாநாயக்க,**
சனாதிபதி.

கொழும்பு,
2026, சனவரி 28.

**ஒழுங்குவிதிகள்**

சுருக்கப் பெயர்

1. இவ்வொழுங்குவிதிகள் 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

## பொது

பொருள்கோடல்

2. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில், அதனகத்து வேறேதேனுமொரு வரைவிலக்கணம் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய அல்லது அதனகத்து வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய அல்லது சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி தொடர்பாக, அத்தகைய ஒழுங்குவிதியில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தாலொழிய அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாகவிருப்பதற்குப் பெயரினால் அல்லது பதவியினால் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"அத்தியாவசிய சேவை" என்பது, பொதுப் பயன்பாட்டுக்கானதாகவுள்ள பொது ஒழுங்கை பேணிக்காப்பதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாகவுள்ள ஏதேனும் சேவை என்று பொருள்படுமென்பதுடன், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும் அல்லது அதன் கிளையையும் உள்ளடக்கும்;

"காணி" என்பது, நீர் செறிந்துள்ள நிலத்தை வீடுகளின் அல்லது கட்டிடங்களின் பகுதிகளையும் உள்ளடக்கும்;

"பொலிசு அலுவலர்" என்பது, (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் பொலிசுப் படையிலுள்ள உறுப்பினரொருவர் எனப் பொருள்படும்;

"பகிரங்க அலுவலர்" என்பது, அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அதே பொருளையே உடையதாயிருத்தல் வேண்டும்;

"தேவைக்கெடுத்தல்" என்பது, ஏதேனும் வாகனத்தோடு தொடர்புபட்டு வரும்போது வாகனத்தை உடைமையில் எடுத்தல் அல்லது தேவைக்கெடுக்கும் அதிகாரியின் அகற்றுகையில் இடம்பெறவேண்டிய அவ்வாகனத்தைத் தேவைக்கெடுத்தல் என்று பொருள்படுவதோடு அதன் இலக்கண வேறுபாடுகளும் அல்லது கூட்டுமொழிகளும் அதற்கிணங்கப்பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்;

"பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர்" என்பது, பாதுகாப்பு அமைச்சுக்கான எவரேனும் மேலதிகச் செயலாளரையும் உள்ளடக்கும்; அத்துடன்

"இலங்கை" என்பது, இலங்கையின் ஆள்புலமெனக் கொள்ளப்படுவதுடன், இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளையும் வான் வெளியையும் உள்ளடக்கும்; அத்துடன்

"ஆள்புல நீர்ப்பரப்புகள்" என்பது, அரசியலமைப்பிலுள்ளவாறான அதே பொருளை உடையதாய் இருத்தல் வேண்டும்.

(2) (2 ஆம் அத்தியாயமான) பொருள்கோடற் கட்டளைச்சட்டம், ஒரு சட்டத்தின் அல்லது கட்டளைச்சட்டத்தின் அல்லது தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் பொருள்கோடலுக்கு அது ஏற்புடையதாகின்றவாறு, இவ் அவசரகால ஒழுங்குவிதிகளினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் கட்டளைகளினதும் அல்லது விதிகளினதும் பொருள்கோடலுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) இவ் அவசரகால ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாடு, அதன்கீழ் விடுக்கப்படும் ஏதேனும் பணிப்பில் அல்லது ஆக்கப்படும் கட்டளையில் காலப்பகுதியொன்றைக் குறித்துரைக்கப்படுவதனைத்

தேவைப்படுத்துமிடத்தும் அல்லது இயலச்செய்யுமிடத்தும், அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை அத்தகைய காலப்பகுதியெதனையும் குறித்துரைக்காதவிடத்தும், அத்தகைய காலப்பகுதியானது, அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை எவ்வேற்பாட்டின்கீழ் விடுக்கப்பட்டதோ அல்லது ஆக்கப்பட்டதோ அவ்வேற்பாட்டின் வலுவுடையதாயிருக்கும் காலப்பகுதியெனக் கருதப்படுதல் வேண்டும்.

அவசரகாலத் தத்துவங்கள், சனாதிபதியின் தத்துவங்களுக்கு மேலதிகமான வையாகவிருத்தல்

3. வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட தத்துவங்கள், சனாதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் அதிகாரிக்கு அல்லது ஆளுக்குச் சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட வேறு எவையேனும் உரிமைகளுக்கு அல்லது தத்துவங்களுக்கு மேலதிகமானவையாக இருக்க வேண்டுமேயன்றி அவற்றைக் குறைப்பனவாகவிருத்தலாகாது.

சனாதிபதியின் தத்துவங்களை எவரேனும் அமைச்சருக்குக் கையளித்தல்

4. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் சனாதிபதிக்கு அளிக்கப்படும் அல்லது அவர்மீது சுமத்தப்படும் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, சனாதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அமைச்சரால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

தகுதிவாய்ந்த அதிகாரியை நியமித்தல்

5. (1) சனாதிபதி, இலங்கை முழுவதற்குமாக அல்லது எவரேனுமாள் எந்தக் கடிதத்தின்மூலம் நியமிக்கப்படுகின்றாரோ அந்தக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்புக்காக அல்லது இடத்துக்காகப் பொதுவாக அல்லது விசேடமாக ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்படக்கூடிய ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாக அத்தகைய ஆளைப் பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாமென்பதுடன் எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அந்நோக்கங்களுள் அத்தகையவற்றுக்கு வரையறுக்கவும்படலாம்:

ஆயின், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும், அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பிற்கென அல்லது இடத்திற்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரிகளாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் நியமிக்கப்படுவதைத் தடைசெய்வதாகக் கருதப்படலாகாது.

(2) பெயர்குறிப்பிடப்பட்ட பதவியொன்றை வகிப்பவர், தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, அப்போது, முரணாக வெளிப்படையான ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, அந்த நியமனம், அப்பெயர்குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய கடமைகளை அப்போதைக்குப் புரிகின்ற ஆளுக்கு நீடிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல்

6. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள எவையேனும் விசேட ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக எவரேனும் ஆளுக்கு விடுக்கவிருக்கும் ஓர் அறிவித்தலை அந்த ஆளுக்கு கையளிப்பதன்மூலம் அல்லது அவர் கடைசியாய் வசித்த இடத்திற்கு அல்லது வழக்கமான வாழிடத்துக்கு அல்லது அவர் தொழிலிடத்திற்கு முகவரியிடப்பட்ட அஞ்சலில் அதனை அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

கட்டளை முதலானவற்றை இல்லாதொழித்தலும் வேறுபடுத்தலும்

7. ஏதேனும் கட்டளையை அல்லது விதியை ஆக்குவதற்கு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவமும், அக்கட்டளையை அல்லது விதியை இல்லாதொழிப்பதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு அதேமுறையிலும், நிபந்தனைகளெவையுமிருப்பின், அவற்றுக்கமையவும் பிரயோகிக்கப்படற்பாலதான ஒரு தத்துவத்தையும் உள்ளடக்குவதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### வளவுகளை உடமையாக்கி எடுத்தலும் மற்றும் வாகனங்களையும் தேவைக்கெடுத்தலும் முதலியன

அவ் இடப்பரப்பிற்கான வளவுகளைத் தேவைக்கெடுத்தல்

8. (1) தனியார் வதிவிட அல்லது வர்த்தக கட்டிடம் அல்லது வளவுகள் தவிர்ந்த எவையேனும் கட்டிடம் அல்லது வளவுகள் ஏதேனும் இயற்கை அனர்த்தத்துடன் தொடர்புபட்ட வேலைக்கு அவசியமாகவுள்ளவிடத்து இடரப்பரப்பின் பொலிசு அத்தியட்சகர் அத்தகைய நோக்கத்திற்காக, அத்தகைய கட்டிடத்தை அல்லது வளவுகளை உடமைக்கெடுத்தல் வேண்டுமென்பதுடன் அதில்

காணப்படும் ஆளெவரையும் வெளியகற்றி அதிகாரமளிக்கப்படாத ஆட்கள் எவரும் அத்தகைய வளவுக்குள் செல்லாதிருப்பதை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

வாகனங்களைத் தேவைக்கெடுத்தல்

9. (1) தகுதிவாய்ந்த அதிகாரி பகிரங்க ஒழுங்கைப் பேணிக்காத்தல் அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பராமரிப்பதற்காக அவ்வாறு செய்தல் அவசியமானதும் தகுதியானதுமாகவுள்ளதென கருதினால் அவர் இலங்கையில் தனியாருக்குச் சொந்தமான வாகனம் தவிர்ந்த ஏதேனும் வாகனங்களை தேவைக்கெடுக்கலாமென்பதுடன் தேவைக்கெடுத்தலுடன் தொடர்புபடுவதில் அவசியமானதென அல்லது தகுதியானதென தகுதிவாய்ந்த அதிகாரிக்கு தோன்றுகின்றவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் வாகனத்தை தேவைக்கெடுக்கின்றவிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, பகிரங்க ஒழுங்கைப் பேணிக்காத்தல் அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு அவசியமான வழங்கல் மற்றும் சேவைகளைப் பராமரிப்பதில் அவர் தகுதியானதென நினைக்கின்றவாறான அத்தகைய நோக்கத்திற்கும் அத்தகைய முறையிலும் வாகனங்களை உபயோகிக்கலாம், கையாளலாம் அல்லது உபயோகிக்க அதிகாரமளிக்கலாம்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதன் தத்துவங்களை பயனுற பிரயோகிப்பதற்கு அவ்வாறு செய்தல் வேண்டுமென அபிப்பிராயப்படின் அவர் இலங்கை முழுவதும் தொடர்பாக அல்லது அதனது ஏதேனும் பாகம் தொடர்பாக, கட்டளையொன்று தொடர்புறுத்தும் இடப்பரப்பிலுள்ள ஏதேனும் வளவுகளின் உடமையில் அல்லது கட்டுப்பாட்டில் கட்டளையில் விபரிக்கப்படக்கூடியதான ஏதேனும் அத்தகைய வாகனத்தை, இக்கட்டளை பயனுறும் வேளையில் கொண்டிருக்கும் ஆளெவரும் அந்த வளவுகளிலிருந்து வாகனத்தை அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஆளால் அல்லது அதிகாரியினால் அங்கிருந்து அகற்றப்பட அனுமதிக்கப்படும் வரையில் அதனை அகற்றுதலோ, அல்லது அகற்றுவித்தலோ அல்லது அகற்ற அனுமதித்தலோ ஆகாது.

(4) ஆயுத படையின் அலுவலர் அல்லது அரசாங்கத்தின் அலுவலர் எவரேனும், அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுத்தப்பட்டதன் மேல் இவ்வொழுங்கு விதியின் முற்போந்த ஏற்பாடுகளால் அவ்வாள் மீது அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரயோகத்தில் எவரேனும் ஆளுக்கு ஒத்தாசை அல்லது உதவியளித்தல் வேண்டும்.

ஆள்சார் சேவைகளைத் தேவைப்படுதல்

10. சனாதிபதி அத்தியாவசிய சேவைகளின் பராமரிப்புத் தொடர்பில் அல்லது ஒத்தாசையில் ஏதேனும் வேலையை செய்வதற்கு அல்லது ஏதேனும் ஆள்சார் சேவை ஆற்றுவதற்கு எவரேனும் பகிரங்க அலுவலரை தேவைப்படுத்துவதற்கு ஆன முறையில் தத்துவங்களை அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரி அல்லது அலுவலர்களுக்கு தனது கைப்பட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் தேவைப்படுத்தலாம் அல்லது கையளிக்கலாம். எவரேனும் பகிரங்க அலுவலர் இவ்வொழுங்கு விதியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையுடன் முரண்படும் அல்லது இணங்கியொழுகத் தவறுமிடத்து தவறொன்றுக்கு குற்றவாளியாவதல் வேண்டும்.

ஆணையாளர் தலைமையதிபதியின் நியமனம்

11. (1) சனாதிபதி கட்டளை மூலம் இலங்கை முழுவதற்குமான அல்லது அதன் பகுதியேதேனுக்கும் அத்தியாவசியமான சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியாக இருப்பதற்கென எவரேனும் ஆளை பெயர் குறித்து அல்லது பதவி குறித்து கட்டளை மூலம் நியமிக்கலாம். அத்தியாவசிய சேவைகள் பராமரித்தல் தொடர்பிலான எல்லா நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதலும் ஒன்றிணைத்தலும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி புரிதலுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பிரதி ஆணையாளர்களும், உதவி ஆணையாளர்களும் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கப்படலாம்.

(3) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் பிரதி ஆணையாளர், உதவி ஆணையாளர் ஒருவருக்கு இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் உரித்தாக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின் கீழ் கடமைகளைப் புரியும் நோக்கத்திற்காக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதியின் கீழ் எவருக்கு ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வதிகாரி அல்லது அலுவலர் மீது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம்.

(5) அத்தியாவசிய ஆணையாளர் தலைமையதிபதி -

(அ) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் எந்த அலுவலருக்கு அல்லது இணைப்பு அலுவலருக்கு ஏதேனும் தத்துவங்கள் அளிக்கப்பட்டிருக்கிறதோ அவ் அலுவலருக்கு அல்லது இணைப்பு அலுவலருக்கு.

அத்தியாவசிய சேவைகளின் பராமரிப்பை உறுதிப்படுத்த அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம் அத்துடன் ஒவ்வொரு அத்தகைய பணிப்புடன் இணங்கியொழுகுதல் விடயத்திற்கேற்றவாறாக தகுதிவாய்ந்த அதிகாரி, அலுவலர் அல்லது இணைப்பு அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

அத்தியாவசிய சேவைகள்

12. (1) ஏதேனும் அத்தியாவசிய சேவை பகிரங்க ஒழுங்கைப் பேணிக்காப்பதற்கும் சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்கும் அவசியமாவதெனத் தோன்றினால் சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் ஏதேனும் சேவையை அத்தியாவசிய சேவையொன்றாக வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் பந்தியின் நியதிகளின்படி சனாதிபதியால் ஓர் அத்தியாவசிய சேவையாக வெளிப்படுத்தப்பட்ட சேவையொன்று தொடர்பிலான ஏதேனும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரும் –

(அ) அத்தகைய கட்டளையின் திகதியிலிருந்து ஒரு நாள் கழிந்த பின்னர் சட்டபூர்வமான காரணமின்றி அவரது வேலைத்தலத்திற்கு அல்லது தொழிலிடத்திற்கு அல்லது அவரது தொழில்தருநரால் அல்லது அவரது தொழில்தருநரின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் ஆளொருவரால் காலத்துக்குக் காலம் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய வேறு இடத்திற்கு வருகைதர மறுக்கின்றவரும் அல்லது தவறுகின்றவரும் அல்லது சட்டபூர்வமான காரணமின்றி வேலை செய்யத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது வேலைக்கு வராதிருக்கின்றவரும் அத்தகைய சேவையில் அவரது தொழில்தருநரின் நியதி நிபந்தனைகளுக்கிணங்க வழமையான வேலைநாளில் முழுக்காலப்பகுதியும் அல்லது ஏதேனும் பாகத்தில் வேலை செய்யாது ஒதுங்கியிருக்கின்றவரும்;

(ஆ) அத்தகைய கட்டளையில் திகதியிலிருந்து ஒருநாள் கழிந்த பின்னர் அவரது தொழில் தருநரால் அல்லது அவரது தொழில் தருநரின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் ஆளொருவரால் அவர் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேலையை சட்டபூர்வமான காரணமின்றி புரியத் தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவரும்; அல்லது

(இ) குறித்துரைக்கப்பட்ட சேவையொன்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவராக இருந்துகொண்டு அவரது தொழில் தருநரால் அல்லது அவரது தொழில் தருநரின் அதிகாரித்தின் கீழ் செயற்படும் ஆளொருவரால் அவர் காலத்துக்குக்காலம் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேலையை சட்டபூர்வமான காரணமின்றி அத்தகைய வேலையைச் செய்வதற்கு அத்தகைய தொழில் தருநரால் அத்தகைய ஆளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் அல்லது இடத்தில் அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள் (அத்தகைய நேரம் அல்லது இடம் அல்லது காலப்பகுதி வழமையான வேலை நேரங்களுக்குள் இருப்பினுஞ்சரி வெளியிலிருப்பினுஞ் சரி, விடுமுறை நாட்களிலிருப்பினுஞ் சரி) செய்யத் தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவருமான ஆளெவரும், அவர் வேலை நிறுத்தமொன்றை அல்லது ஒழுங்குசெய்யப்பட்ட வேறு நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்கையில் அவ்வாறு வேலைக்குச் செல்ல அல்லது வேலை செய்யத் தவறியுள்ளார் அல்லது மறுத்துள்ளார் என்பது எவ்வாறிருப்பினும் -

(i) எல்லா நோக்கங்களுக்காகவும் வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது அவரது தொழிலை ஆளுகின்ற ஏதேனும் ஒப்பந்தத்தின் நியதி நிபந்தனைகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் அவரது தொழிலை உடனடியாக முடிவுறுத்தியுள்ளதாக அல்லது வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) மேலதிகமாக தவறொன்றுக்கு குற்றவாளியாதலும் வேண்டும்.

(3) ஏதேனும் சேவை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் சனாதிபதியால் அத்தியாவசிய சேவையொன்றாக வெளிப்படுத்தப்படுமிடத்து –

(அ) எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் –

(i) அச்சேவை மேற்கொள்ளப்படுவதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற, அதனைத் தடைசெய்கின்ற, தாமதப்படுத்துகின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற;

(ii) அச்சேவையில் அல்லது அது மேற்கொள்ளப்படுவது தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு எவரேனும் ஆட்கள் அவர்களது வேலைத் தலத்திற்கு வருகை தருவதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற, அதனைத் தடைசெய்கின்ற அல்லது தடுக்கின்ற;

(iii) அச்சேவையில் அல்லது அதனை மேற்கொள்வது தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு எவரேனும் ஆளை அவரது வேலைத் தளத்திற்கு வருகை தருவதைத் தவிர்க்குமாறு தூண்டுகின்ற, செயலாற்றுகின்ற அல்லது ஊக்கப்படுத்துகின்ற;

(iv) ஓர் அரசாங்கத் திணைக்களமாக அல்லது அதன் கிளையாக இருந்துகொண்டு இச்சபைக்குப் பதிலாக அல்லது அதற்குச் சமாந்தரமான வேறு ஏதேனும் சேவையைத் தாபித்தலை அல்லது பேணுதலை நிர்ப்பந்திக்கின்ற, தூண்டுகின்ற, செயலாற்றுவிக்கின்ற அல்லது ஊக்கப்படுத்துகின்ற;

(v) அச்சேவையில் அல்லது அதனை மேற்கொள்ளுதல் தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு எவரேனும் ஆளை சரணடையுமாறு அல்லது அவரது தொழிலை விட்டுச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கின்ற, தூண்டுகின்ற, செயலாற்றுவிக்கின்ற அல்லது ஊக்கப்படுத்துகின்ற (அத்தகைய ஆள் அதன் விளைவாக அவ்வாறு சரணடைந்தாலுஞ்சரி சரணடையாவிட்டாலுஞ்சரி, அல்லது விட்டுச் சென்றாலுஞ்சரி விட்டுச் செல்லாவிட்டாலுஞ்சரி); அல்லது

(vi) வேறு எவரேனும் ஆள் அச்சேவையில் அல்லது அதனை மேற்கொள்ளுதல் தொடர்பில் தொழில் வழங்குவதனை அல்லது ஏற்றுக்கொள்வதனை தடைசெய்கின்ற;

ஆளெவரும்; அல்லது

(ஆ) இப்பந்தியில் (அ) என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட செயலொன்றைப் புரியுமாறு வேறு எவரேனும் ஆளை ஏதேனும் பௌதீக செயலினால் அல்லது ஏதேனும் உரையினால் அல்லது எழுத்தினால் தூண்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற ஆளொருவரும், (அவ்வாறு குறித்துரைக்கப்பட்டவாறாக ஏதேனும் செயலின் விளைவாக அத்தகைய வேறு ஆள் புரிகின்றாரோ அல்லது இல்லையோ)

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் நடைமுறை காரணமாகத் தமது தொழிலை முடிவுறுத்தியவராக அல்லது வறிதாக்கியவராகக் கருதப்படும் ஒவ்வோராளும், அத்தகைய முடிவுறுத்துகையிலிருந்து அல்லது வறிதாக்குவதிலிருந்து மூன்று நாட்களினுள், அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்தின் சார்பில் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் குடிமனையை வறிதாக்குதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய குடிமனையை வறிதாக்கத் தவறுகின்ற எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பந்தியில் “குடிமனை” என்பது, வதிவு நோக்கத்துக்காக இருப்பாட்சி கொள்ளப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டிடம் அல்லது அறை அல்லது வேறு இடவசதி என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய கட்டிடம், அறை அல்லது வேறு இட வசதி எக்காணியில் அல்லது வளவுகளில் அமைந்துள்ளதோ அக்காணியையும் அல்லது வளவுகளையும் உள்ளடக்கும்.

(5) ஏதேனும் சேவை, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தியாவசியமான சேவையெனச் சனாதிபதியினால் வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தியாவசியமானதென வெளிப்படுத்தப்படும் அத்தகைய ஏதேனும் சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது அச்சேவையைச் சேர்ந்துள்ள எவரேனும் அலுவலர், சேவையாளர், ஊழியர் அல்லது முகவர் என்போரின் சேவைகள், அவசியமானதெனக் கருதப்படும் இடங்களிலெல்லாம், பாதுகாப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அது சார்பில் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அல்லது உரிய விடயம் எவ்வமைச்சரின் அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருடனான கலந்தாலோசனையுடன் தேவைக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

குடியியற் பாதுகாப்பு ஆணையாளரை நியமித்தல்

13. சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் பகுதியேதேனுக்கும் குடியியற் பாதுகாப்பு ஆணையாளராகவிருப்பதற்கென எவரேனுமாளைப் பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம் குடியியற் பாதுகாப்பைப் பேணுதல் தொடர்பான எல்லாச் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதும் ஒழுங்கிணைப்பதும் குடியியற் பாதுகாப்பு ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் குடியியற் பாதுகாப்பு ஆணையாளர் தமது கடமைகளைப் புரிவதில் அவருக்கு உதவி புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பிரதி ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரிகள், பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கப்படலாம்.

(3) குடியியற் பாதுகாப்பு ஆணையாளர், எவரேனும் பிரதி ஆணையாளருக்கு, உதவி ஆணையாளருக்கு அல்லது தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது அவற்றின் கீழ் அத்தகைய ஆணையாளருக்கு அளிக்கப்படும் அல்லது சுமத்தப்படும் அல்லது குறித்தளிக்கப்படும் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதிகளின் கீழான கடமைகளைப் புரியும் நோக்கத்துக்காக, குடியியற் பாதுகாப்பு ஆணையாளர், ஏதேனும் தத்துவம் அவ்வொழுங்குவிதியின் கீழ் எந்த அதிகாரி அல்லது அலுவலருக்குக் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு அளிக்கப்படும் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம்.

(5) குடியியற் பாதுகாப்பு ஆணையாளர்-

(அ) இவ்வொழுங்குவிதியின் கீழ் எந்த அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அதிகாரிக்கும் அல்லது அலுவலருக்கும்; அல்லது

(ஆ) 32 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்படும் ஒழுங்கிணைப்பு அலுவலரொருவருக்கும்.

குடியியற் பாதுகாப்பைப் பேணுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளை விடுக்கலாம் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு பணிப்புக்கும் இணங்கியொழுகுதல் அத்தகைய அதிகாரி அல்லது அலுவலர் ஒவ்வொருவரினதும் கடமையாதலும் வேண்டும்.

மதியுரைக் குழுக்கள்

14. பிரதேச செயலாளர் ஒவ்வொருவரும் தங்களது உரிய பிரதேசச் செயலாளர் பிரிவுகளுக்கு பகிரங்க அலுவலர்களும் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஆட்களும் அடங்கிய மதியுரைக் குழுவொன்றை நியமிப்பதற்கு தத்துவத்தைக் கொண்டவராதல் வேண்டும். அந்தப் பிரதேசச் செயலாளர் பிரிவில் பகிரங்க ஒழுங்கைப் பேணிக்காத்தல் அத்தியாவசிய வழங்கல்களையும் சேவைகளையும் பேணுதல் என்பன பற்றி இயைபான அதிகாரிகளுக்கும் மதியுரை வழங்குதல் அத்தகைய குழுவொன்றினதும் கடமையாதல் வேண்டும்.

அதிகாரமளிக்கப்படாத நுழைவுத் தடுப்பு

15. (1) அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்காக முழுமையாக அல்லது பிரதானமாக வதியுறும் அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் பிரதேசத்திற்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் அதிகாரமில்லாமல் நுழைவதனைத் தடுப்பதற்கான சிறப்பான முற்காப்பு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டுமென்று தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அபிப்பிராயப்பட்டால், அந்தத் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளை ஒன்றின் மூலம் அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்தகைய விலக்குகளுக்கமைய, எந்தோவோராளும் அந்தக் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டவாறாக அதிகாரி அல்லது ஆளின் அனுமதியின்றி அந்தப் பிரதேசத்துக்குள், இடத்திற்குள் அல்லது வளவுக்குள் நுழைய அல்லது தங்கியிருக்கக்கூடாதெனப் பணிக்கலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை மீறி எவரேனும் பிரதேசத்திற்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் இருப்பின் அவருக்கெதிராக எடுக்கப்படக்கூடிய வேறு நடவடிக்கைகளுள் எதற்கும் பங்கமின்றி, அவர் அந்த இடத்திலிருந்து எவரேனும் பொலிஸ் உத்தியோத்தரால் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியால் அதற்கென அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளால் அகற்றப்படலாம்.

(3) இவ்வொழுங்குவிதியில் அத்தியாவசிய சேவையோடு தொடர்பில் "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது சொற் அத்சேவையின் நோக்கங்களுக்காகச் சனாதிபதியினால் பெயர் கொண்டு அல்லது பதவிப் பெயர் கொண்டு நியமிக்கப்படும் எவரேனுமொருவர் என்று பொருள்படும்.

கைவிடப்பட்ட கட்டிடங்கள் அல்லது வளவுகளின் பாதுகாப்பு

16. (1) பேரழிவுச் செயலாட்சி, அல்லது பொதுமக்கள் காப்புக்கு பொறுப்பாகவுள்ள ஏதேனும் அரச முகவராண்மையினால் வழங்கப்பட்ட ஓர் எச்சரிக்கையை, ஒரு பணிப்பை அல்லது ஒரு கட்டளையைப் பின்பற்றி ஏதேனும் கட்டிடத்தின் அல்லது வளவுகளின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அத்தகைய கட்டிடத்தை அல்லது வளவுகளை தற்காலிகமாகக் கைவிட்டுள்ளவிடத்து, அப்பிரதேசத்தின் பொலிசு அத்தியட்சகர் அத்தகைய கட்டிடத்தை அல்லது வளவுகளை காப்பதற்கும், பாதுகாப்பதற்கும் மற்றும் பேணிக்காப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(2) ஓராம் பந்தியினால் வழங்கப்பட்ட தத்துவங்களின் பொதுவானதன்மைக்குப் பங்கமின்றி, அத்தகைய நடவடிக்கைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கலாம் –

(அ) அத்தகைய கட்டிடம் அல்லது வளவுகளுக்கான அதிகாரமளிக்கப்படாத உள்நுழைவை வரையறுத்தல் அல்லது தடுத்தல்;

(ஆ) முத்திரையிடுதல், தடுப்புவேலியிடுதல் அல்லது காவலின்கீழ் அத்தகைய கட்டிடத்தை அல்லது வளவுகளை வைத்திருத்தல்; அத்துடன்

(இ) அத்தகைய கட்டிடத்திற்கு அல்லது வளவுகளுக்கு சேதம் ஏற்படுத்தல், திருட்டு அல்லது சட்டவிரோதமாக இடங்கொண்டிருத்தல் போன்ற விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் செயலை நீக்குதல் அல்லது தடுத்தல்.

(3) ஆளெவரும் சட்டமுறையான அதிகாரமின்றி இவ்வொழுங்குவிதியின்கீழ் காப்பளிக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்பட்ட ஏதேனும் கட்டிடத்தினுள் அல்லது வளவுகளினுள் உள்நுழைதல், இடங்கொண்டிருத்தல், சேதம் விளைவித்தல், அதிலிருந்து ஆதனத்தை அகற்றுதல் அல்லது வேறுவகையாகத் தலையீடுசெய்தல் ஆகாது.

## பாகம் III

## தவறுகள், தண்டனைகள் மற்றும் முதலியன

பகிரங்க அலுவலர்களிடையே விசுவாசக் குறைப்பு முதலியனவற்றைத் தடுத்தல்

17. எவரேனுமாள் -

(அ) (i) பகிரங்க அலுவலர்;

(ii) குடியரசின் சேவையில் ஈடுபட்டுள்ளனர்; அல்லது

(iii) அத்தியாவசிய சேவைகளைப் புரிவதில் ஈடுபட்டுள்ளனர் என்போர்க்கிடையில் வெறுப்பை ஏற்படுத்தவோ

(ஆ) பந்தி (அ) குறிப்பீடு செய்யப்பட்டுள்ள யாரேனுமொருவரை அத்தகையவர் பகிரங்க அலுவலர் ஒருவராக அவரது கடமையின் மீறுகையில் எதனையும் செய்யும்படியோ அல்லது செய்யாது விடும்படி எத்தனிக்கவோ ஆகாது.

துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றை விநியோகித்தல்

18. பொதுமக்கள் பாதுகாப்புக்கு, பொது ஒழுங்கமைதிக்கு அல்லது சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குப் பங்கமாகவிருக்கும் உள்ளீடுகளைக் கொண்டுள்ள எவையேனும் சுவரொட்டிகளை, கைத்துண்டுகளை அல்லது துண்டுப் பிரசுரங்களை ஆளெவரும் பொதுமக்களுக்குத் தெரியக்கூடிய ஏதேனுமிடத்தில் ஒட்டுதலோ அல்லது பொதுமக்களிடையே விநியோகித்தலோ ஆகாது.

வதந்திகளையும் பொய்யான கூற்றுக்களையும் தெரிவித்தல் அல்லது பரப்புதல்

19. எவரேனுமாள் வாய்மொழி மூலமாகவோ அல்லது ஏதேனும் எழுத்துமூல, இலத்திரனியல், எண்ணிம முறைகள் அல்லது ஏதேனும் ஊடக, தகவல் மற்றும் தொடர்பாடற் தொழில்நுட்ப, தன்னியக்க முறைமை அல்லது செயற்கைத் தொழில்நுட்ப, தன்னியக்க முறைமை அல்லது செயற்கைத் தொழில்நுட்ப முறை உள்ளடங்கலான எத்தகையவுமான வேறெவையேனும் முறைகள் மூலமாகவோ பொதுமக்களுக்கிடையில் பயத்தை ஏற்படுத்தும் அல்லது பொதுமக்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்தும் சாத்தியமுடைய எவையேனும் வதந்திகளை அல்லது பொய்யான கூற்றுக்கள் எதனையும் தொடர்பாடவோ, வெளியிடவோ, தோற்றுவிக்கவோ அல்லது பரப்புதலோ ஆகாது.

பொய்யான கூற்றுக்கள்

20. எவரேனுமாள் –

(அ) ஒழுங்குவிதிகளை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை பின்பற்றி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு விடையளிக்கும் போது, முக்கியமான ஒரு விபரத்தில் பிழையானதென்று அவரறிந்த அல்லது அவ்விதம் நம்புவதற்கு நியாயமான காரணங்களுடைய கூற்றெதனையும் கூறினால் அல்லது தகவலெதனையும் தெரிவித்தால்; அல்லது

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் அளிக்கும்படி கேட்கப்பட்ட ஏதேனும் கணக்கு, வெளிப்படுதல், மதிப்பீடு, விபரத்திரட்டு அல்லது வேறேதேனும் ஆவணம் என்பவற்றில் மேற்சொல்லப்பட்டவாறாக கூற்றைக் கூறினால்,

தவறொன்றுக்கு அவர் குற்றவாளியாதல் வேண்டும்.

மிரட்டல் முதலியவற்றை தடுத்தல்

21.(1) ஏதேனும் பிரதேசத்தில் எந்தவோராலும் வேறு எவரேனும் ஓர் ஆள் உறையும் அல்லது வேலை செய்யும் அல்லது தொழில் நடத்தும் அல்லது தற்செயலாகத் தங்கும் வீட்டில் அல்லது இடத்தில் அல்லது வீட்டிற்குக் கிட்ட அல்லது இடத்திற்குக் கிட்ட அந்த வீட்டில் அல்லது இடத்திலுள்ள எவரேனுமோராளை மிரட்டுவது போன்ற அல்லது அத்தகைய ஒருவர் அவ்வீட்டிற்குள் நுழைவதை அல்லது வீட்டிலிருந்து வெளிக்கிளம்புவதை தடை செய்வது போன்ற அல்லது அமைதியை மீறுவதற்கு வழிவகுக்கக்கூடிய முறையில் காத்து நிற்கக்கூடாது.

(2) இவ்வொழுங்குவிதியின் "மிரட்டல்" என்ற சொற்பதம் ஓர் ஆளினது மனதில் தமக்கு அல்லது தமது குடும்பத்திலுள்ள எவரேனும் உறுப்பினருக்கு அல்லது தம்மைச் சார்ந்திருக்கும் யாரேனுமொருவருக்கு தீங்கு விளைந்து விடுமோ என்ற நியாயமான ஐயவச்சத்தை ஆக்குதல் அல்லது எவரேனும் ஒருவருக்கு அல்லது ஆதனத்துக்கு தீங்கு விளைத்து விடுமோ என்ற நியாயமான அச்சத்தை ஆக்குதல் வேண்டும் என்று பொருள்படும். "தீங்கு" என்ற சொற்பதம் ஆள் ஒருவருக்கு அவரது வியாபாரம், தொழில், தொழிலீடுபாடு அல்லது வருவாய்கள் தொடர்பான தீங்குகளை உள்ளடக்குதலோடு நடவடிக்கை எடுக்கக்கூடிய பிழைகளையும் உள்ளடக்கும்.

அதிகாரம் பெற்ற ஆட்களை எதிர்த்தல் அல்லது தடுத்தல்

22. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அல்லது அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஓராளுக்கு அளிக்கப்பட்ட அல்லது ஓராளின்மேற் சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அவர் பிரயோகிப்பதை அல்லது புரிவதை எந்த ஆளும் எதிர்த்தலோ தடுத்தலோ ஆகாது.

தெருக்கள், புகைவண்டிப் பாதை முதலிய வற்றை மறித்தலும் சேதப்படுத்துதலும்

23. எவ்வோராளும் சட்டப்படியான அதிகாரமின்றி ஏதேனும் பொதுத் தெரு, பாலம் அல்லது மதகு அல்லது ஏதேனும் புகைவண்டிப் பாதை, அல்லது பொதுத் தெருப் போக்குவரத்து வாகனத்தைத் தடை செய்தலோ சேதப்படுத்தலோ ஆகாது.

தவறுகள் புரிய எத்தனித்தல்

24. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான தவறொன்றை-

(அ) செய்வதற்கான ஆயத்த முறையிலான ஏதேனும் செயலை புரிய எத்தனிக்கும் அல்லது செய்கின்ற;

(ஆ) புரிவதற்கு இன்னோராளுக்கு உதவியளிக்கும் அல்லது உடந்தையாயிருக்கும்; அல்லது

(இ) புரிவதற்கு இன்னோராளுடன் சூழ்ச்சி செய்யும்,

எவரேனுமாள் அத் தவறுக்கு தானும் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் அத்தகைய தவறுக்கு விதிக்கப்பட்டவாறான அதே முறையில் விளங்கப்படுதலும் அதே தண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

தவறுக்கு உதவுதல்

25. யாரேனுமொருவர் ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்றிற்காகக் குற்றவளியாகின்றாராவென்பதை அல்லது நம்புவதற்கு நியாயமான காரணமுடையவராயிருக்கும் எந்தவோராளும், அந்த யாரேனுமோராளுக்கு அந்தச் சொல்லப்பட்ட குற்றத்திற்காக அந்த ஆளைக் கைது செய்வதை அல்லது தண்டிப்பதை தடுக்கும் அல்லது இடைஞ்சல் செய்யும், குழப்பும் எண்ணத்தோடு உதவியளிக்கக்கூடாது.

குழுவினரால் செய்யப்படும் குற்றங்கள்

26. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்று ஆட்கள் குழுவொன்றினால் செய்யப்படுமிடத்து-

(அ) அந்தக்குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், அதன் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது கூட்டிணைக்கப்பட்டவரும்: அத்துடன்

(ஆ) அந்தக்குழுவானது குழுமமொன்றாகவிருப்பின் அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்குடைமை யாளரும்,

அத்தவறானது அவரது அறிவுக்குட்பட்டாது புரியப்பட்டதாக எண்பித்தாலொழிய அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கான முறையான எல்லா விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்திருந்தாரென எண்பித்தாலொழிய தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

தண்டங்கள்

27. (1) ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது விதியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்பை அல்லது சுமத்தப்பட்ட நிபந்தனையை மீறும் அல்லது அவற்றுக்கு இணங்கத் தவறும் எந்தவோராளும் குற்றமொன்று புரிந்தவராகி அத்தகைய அவ் ஒழுங்குவிதியிற் காணப்படும் எவையேனும் சிறப்பான ஏற்பாடுகளுக்கமைய, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து மூன்று மாதத்திற்குக் குறையாததும் ஐந்தாண்டினை விஞ்சாததுமான ஒரு காலத்திற்குக் கடூழிய சிறைத் தண்டனையும் ஐந்நூறு ரூபாவுக்கு குறையாமலும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமும் விடுக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஒரு குற்றத்திற்கு அவ்வொழுங்குவிதியின் தண்டனையெதுவும் விதித்துரைக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய குற்றத்தைப் புரியும் ஓர் ஆள் நீதிவானொருவர் முன்னராக விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்படும் அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

தகவல் கொடுப் பதற்குரிய கடமை

28. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புரிவதற்கானவோர் உட்கருத்து, எத்தனிப்பு அல்லது புரிவதற்கான ஆயத்தமுறை அல்லது செய்கை பற்றி அறியவரும் எவரும் அது பற்றிய தகவலை மிக அண்மையில் உள்ள கிராமசேவை உத்தியோகத்தருக்கு அல்லது மிக அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாகக் அறிவித்தல் வேண்டும்.

(2) பந்தி (1) இல் குறிப்பிடப்பட்ட தகவலை வேண்டுமென்று கொடுக்கத்தவறும் அல்லது மறுக்கும் எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) அவசரகால ஒழுங்குவிதியொன்றில் கீழான ஏதேனும் தவறொன்று தொடர்பிலான ஏதேனும் தகவலைப் பெறும் கிராம உத்தியோகத்தரெவரும், மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்கு அத்தகைய தகவலை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

நீதிமன்ற வழக்கு நடவடிக்கை களுக்கான முன்னுரிமை

29. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆளொருவரினால் புரியப்பட்டதெனச் சார்த்தப்படும் தவறொன்று தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகள், நீதிமன்றத்தின் வேறேதேனும் அலுவலலுக்கு முன்னர் எடுக்கப்படுதல் வேண்டும்.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதல்

30. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஒழுங்குவிதிகளின்கீழ் புரியப்பட்ட தவறொன்றின் எவையேனும் புலனாய்வுக்கு குற்றவழக்குத் தொடருதல், விளக்கம் முதலியவற்றுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் IV

### நானாவிதமான ஏற்பாடுகள்

தகவலை பெறுவதற்கான அல்லது உறுப்புரையை பரிசோதிப்பதற்கான தத்துவம்

31. (1) இவ்வொழுங்குவிதிகளில் அடங்கியுள்ள ஏதேனும் விசேட ஏற்பாடுகளுக்குப் பங்கம் இன்றி ஆளெவரும், தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதென வேண்டப்படுவதன்மேல், தேசிய பாதுகாப்பு நலன்களில் அல்லது பொது ஒழுங்கமைதியைப் பேணுவதற்கு, அல்லது இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்கு, பெறுவது அல்லது பரிசோதிப்பது அவசியமானதென அல்லது உசிதமானதென அதிகாரி அல்லது அவ்வேண்டுகோளை விடுத்த ஆள் அபிப்பிராயப்படுகின்ற தகவல் அல்லது பொருளாகவுள்ள விடயத்திற்கு ஏற்றவாறு அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அவரது உடைமையிலுள்ள ஏதேனும் அத்தகைய தகவல் அல்லது பொருள் வேண்டுகோளில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய அதிகாரிக்கு அல்லது ஆளிற்கு தகவலை அல்லது பொருளை கொடுத்துதவுதல் அல்லது முன்வைத்தல் வேண்டும் என்பதுடன், ஆள் எவரும் இவ்வொழுங்குவிதியின் கீழ் அவருக்கு முறையாக செய்யப்பட்ட வேண்டுகோளைப் பின்பற்றி அவருடைய உடைமையில் ஏதேனும் தகவலை அல்லது பொருளை கொடுத்து உதவுவதற்கு அல்லது முன்வைப்பதற்கு தவறியிருப்பின், அவர் தவறொன்றின் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியில் "பொருள்" என்பது ஏதேனும் புத்தகம், கணக்குப் புத்தகம் அல்லது ஆவணம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

ஒருங்கிணைப்பு அலுவலரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

32. (1) சனாதிபதியானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இலங்கையின் ஏதேனும் இடப்பரப்பிற்காக ஒருங்கிணைப்பு அலுவலராக இருப்பதற்கு எவரேனும் ஆளைப் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(2) ஒருங்கிணைப்பு அலுவலர், இலங்கையில் ஏதேனும் இடப்பரப்பிற்கான கட்டளை மூலம் சனாதிபதியினால் நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய அலுவலர் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அல்லது வேறு விதமாக மாவட்ட செயலாளர் ஒருவர் மீது அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும் அல்லது தொழிற்பாடுகளையும் அவ்விடப்பரப்பில் பிரயோகித்தல், புரிதல், நிறைவேற்றுதலும் வேண்டும் என்பதுடன் மாவட்ட செயலாளருக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் அந்நோக்கத்திற்காக அவ்விடப்பரப்பின் விடயத்திலான ஏற்புடைமையில், அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலருக்கான குறிப்பீடு ஒன்றாக பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய ஏதேனும் இடப்பரப்பிற்காக (1) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மீது மேற்பார்வையை பிரயோகிப்பதற்கு பிரதம ஒருங்கிணைப்பாளராக இருப்பதற்கு எவரேனும் ஆளை பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(4) இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பிரதான ஒருங்கிணைப்பாளர்களின் கடமைகளைப் புரிவதற்கு அவருக்குத் துணைபுரிவதற்கென அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர்களைச் சனாதிபதி பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(5) பிரதான ஒருங்கிணைப்பாளர், (4) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் எவரேனும் பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர் இவ்வொழுங்கு விதிகளின்கீழ் அத்தகைய பிரதான ஒருங்கிணைப்பாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம்.

(6) மூன்றாம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் எவரேனும் பிரதம ஒருங்கிணைப்பாளர் பிரதான ஒருங்கிணைப்பாளர், அல்லது (4) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் அல்லது பிரதான ஒருங்கிணைப்பாளரின் தத்துவங்களினை (5) ஆம் பந்தியின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்டுள்ளவருமான எவரேனும் பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர்.

(அ) அவர்மீது மேற்பார்வை செலுத்துகின்றவராய் இவ்வொழுங்குவிதியினால் எவரேனும் ஒருங்கிணைப்பு அலுவலருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்; அத்துடன்

(ஆ) அவர் மீது மேற்பார்வை செலுத்துகின்ற எவரேனும் ஒருங்கிணைப்பு அலுவலருக்கு, இவ்வொழுங்குவிதியினால் அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலருக்கு அளிக்கப்பட்ட

அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமை அல்லது பணி, அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலரினால் பிரயோகிக்கப்படுதல், புரியப்படுதல் அல்லது நிறைவேற்றப்படுதல் பற்றி விசேடமான அல்லது பொதுவான பணிப்புக்களை விடுக்கலாம்.

வழக்குக்கான பாதுகாப்பு

33. இவ்வொழுங்குவிதிகளின் எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் அல்லது விடுக்கப்படும் ஏதேனும் கட்டளையின் கீழ் அல்லது பணிப்பின்கீழ், நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் கருமம் அல்லது காரியம் தொடர்பில் வழக்கு அல்லது வேறு சட்டப்படியான வழக்கு நடவடிக்கை எதுவும் குடியியலானதாயினுஞ்சரி அல்லது குற்றவியலானதாயினுஞ்சரி ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்படுதலாகாது.

கைமீட்பு

34. 2025, நவெம்பர் 28 ஆந் திகதிய 2464/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அவசரகால (நானவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள் இத்தால் அதன்கீழ் முறையாக முன்னதாக செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி கைமீட்கப்படுகின்றன.

EOG 01 - 0284

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.